# இலங்கை அரசாட்சி கெசெற் பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,499 — 1925 ம் ௵ கார்த்திகைமீ 20 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

"1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க யாத்திரைகளைக் குறித்த சட்டம்."

விசேஷ முன்னுபாயங்கள் செய்துவைத்தல் ஆவசியமாயிருந்திருக்கிறதும் இப்போதும் அவ்வண்ணம் ஆவசியமாயிருக்கிறதுமான கதிர்காம யாத்திரையையும் திருவிழாவையும் ஒழுங்குபண்ணி நடத்துவதற்காக, அதிகார மந்திரசபையாரின் ஆலோசனையோடு அரசாட்சிப் பரிபாலக உத்தியோகஸ்தர் உத்தமனார் அவர்களால் 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட "யாத்திரைகளைக் குறித்த சட்டம்" எனப் பெயர் பூண்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட பின்வரும் விதானங்களும் கட்டளைகளும் சகலரும் அறிந்துகொள்ளும்படி, பல வருஷங்களாக வருஷந்தோறும் பிரகடனஞ் செய்யப்பட்ட விதானங்களுக்குப் பதிலாக, பிரசித்தஞ் செய்யப்படுகின்றன.

உத்தமனார் அவர்கள் கட்டளைப்படி,

ஆர். என். தேன்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1925 ம் ௵ நொவெம்பர்மீ 17 ந் தேதி.

### விதானங்கள்.

1. சௌக்கியாதார நிமித்தமாக கதிர்காமஇல் மகாகாட்சித் திருவிழா நடக்கும் காலமும் கதிர்காமத்தில் யாத்திரிகர் தங்கிநிற்கும் காலமும் மூன்றுநாள் மாத்திரமாய் இருத்தல் வேண்டும். அப்படியிருக்கவேண்டுமென்றும் இதனால் ஏற்படுத்தப்படுகின்றது (அந்த நாட்களாவன 1925 ம் ௵ நொவெம்பர் மாசம் 29 ந் தேதிதொடக்கம் டிசெம்பர்மாச 1 ம் ந் தேதி வரைக்குமேயாம்) முதற் சொல்லிய தேதிக்கு முன் வந்து சேரும் அல்லது இதில் நியமிக்கப்பட்ட காலத்துக்கு மேல் தங்கிநிற்கும் யாத்திரிகர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

2. திருவிழா நடக்கும் காலத்தில் கதிர்காமத்தில் தொற்றுநோய் உண்டு படுமாகில், கட்டளைகள் கைக்கொள்ளப்படும்படி செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு திருவிழா நிறுத்தப்பட்டதென்று வெளிப்படுத்துவதும் யாத்திரிகரை உடனே அவ்வூரிலிருந்து தங்கள் தங்கள் இடங்களுக்குப் போய்விடும்படி கட்டளை பண்ணுவதும், அவர்கள் போகவேண்டிய பாதைகளைக் குறித்து விடுவதும், நியாய முறையாகும்:

3. கதிர்காமத்துக்கு யாத்திரிகர் போகும் போதிலும், ஆங்கேயிருந்து திரும்பிச் செல்லும் போதிலும், கதிர்காமத்திலும், பின்வரும் காரியங்களைச் செய்து கொள்ள கட்டளைகள் கைக்கொள்ளப்படும் படி செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அதிகாரமுடையவர்களாயிருப்பார்கள் :—

(a) யாத்திரிகருக்குச் சீலை அலைக்கவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலபாதைக்குப் போகவும் வேறுவேறு தலங்களை அவர்கள் மாத்திரமே உபயோகிப்பதற்காக நியமிக்கவும்;
(b) அந்தந்த வகுப்பார் தங்கியிருக்கும்படி வேறு வேறு தலங்களை நியமிக்கவும்;
(c) கூட்டமாகச் செல்லும் யாத்திரிகர் இன்னபாதையால் செல்லவேண்டுமென்று குறிக்கவும்;
(d) யாத்திரிகருக்குக் கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்தலைப் பார்த்து நடத்தவும்;
(e) நோய்கொள்ளும் யாத்திரிகர்குத் தங்கியிருக்கும்படி புறம்பான தலங்களை நியமித்து வைக்கவும் அவர்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படிபண்ணவும் அவர்களுக்குப் பயணம்பண்ண இயலாதுபோனால் நிறுத்திவைக்கவும்;

நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் பண்ணும் கட்டளையை மீறுபவர்கள் ஓர் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

4. பயணத் தல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதாகுமென்று வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அப்படி ஒருவரில்லாதபோளுல் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் தீர்க்கும் தீன்சாமானெல்லாவற்றையும் பறித்து நாசமாக்கிப்போடவும் பொலீஸார் தத்துவமுடையவராயிருக்கிறதல்லாமலும், இக்கடமையை அல்லது வேறு கடமையைச் செய்யவிடாமல தடைபண்ணுபவர்கள் குற்றவாளிகளாகக் காணபபடுவார்கள.

5. மேல்விசாரணைசெய்யும் உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெருமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளைத் தங்கியிருக்குமிடமிருந்து காற்கட்டைக் குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாவார்கள். உத்தரவுச்சீட்டைப் பெறுவோர். தங்கியிருக்குமிடத்தில் மேல்விசாரணை உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும், சுகாதார நோக்கமாகவும் நியமிக்கப்படும் கட்டளைப்பிரமாணங்களை அநுசரிக்கக் கடமைப்பட்டவர்க ளாவார்கள்.

6. கதிர்காமத்தில் தங்கியிருக்குமிடத்ததிகாரி நியமிக்குமிடத்தைவிட வேறிடத்தி லிறைச்சி விற்பவர்கள் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது பொலீஸ் தலைமை அவர்களால் கெட்டதீனென்று விலக்கப்பட்ட சாமான் விற்பவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாகக் கொள்ளப்படுவார்கள்.

7. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்குமிடத்தைவிட வேறே தலத்தில் மலங்கழிக்க சம்பவித்தால் அல்லது மலத்தை மண்ணினுல் மூடாவிட்டால், அல்லது தலைமைககாரர் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றுக்கிறங்க அல்லது குளிக்கச்சம்பவித்தா லப்படிச் செய்தவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாகக் கொள்ளப்படுவார்கள்.

8. தொற்றுவியாதியால் பீடிக்கப்பட்டவன் வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவரில்லாவிட்டால் பிரதான பொலிஸ் உத்தியோகத்தருக்கு அது விஷயத்தை அறிவிககத் தவறினு லல்லது ஒருவன் நோயாளியை ஒழித்துவைத்தால் அல்லது அப்படிச்செய்ய ஏவிவிட்டால், அல்லது உதவிசெய்தால் அப்படிச்செய்பவன் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவனுகக கொள்ளப்படுவான்.

9. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பொலிஸ் பிரதான உத்தியோகஸ்தர் நியமிக்குமிடத்தில் விடுதிவிடுவதல்லாமல் அப்படிச்செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

---

"1898 ம் ஆண்டின் சுவஸ்தான சுகாதாரசங்கச் சட்டம்."

1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களின் சட்டத்தின் 56 ம் பிரிவின்படியும் அப்பிரிவை அநுசரித்தும் திருக்கோணமலைச் சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்டு அதிகார மந்திரசபையாரின் ஆலோசனையோடு அரசாட்சிப் பரிபாலக உத்தியோகஸ்தர் உததமனுர் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனுர் அவர்கள் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1925 ம் ஆ. புரட்டாதிமீ 8 ந் தேதி.

ஈ. பீ. அலெக்சென்டர்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

உபவிதி.

1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களின் சட்டத்தின் 56 ம் பிரிவின்படி திருக்கோணமலைச் சுகாதார சங்கத்தார் செய்யப்பட்டு 1925 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 29 ந் தேதியைக் கொண்ட 7,464 ம் இலக்க அரசாட்சியாரின் கசெற் பத்திரிகையில் 1925 ம் ஆண்டு வைகாசிமீ 11 ந் தேதியைக் கொண்ட அறிவித்தலினுற் பிரசுரஞ்செய்யப்பட்ட உபவிதிகளில் 75 ம் இலக்க உபவிதி அதன் அடியில் "உப்புமீன் போடுதல் அல்லது மீன்கருவாடு காய்ச்சுதல்" என்னும் சொற்களைச் சேர்த்து இத்தால் திருத்தப்படுகின்றது.

---

"1898 ம் ஆண்டின் சுவஸ்தான சுகாதாரசங்கச் சட்டம்."

1898 ம் ஆண்டின் சுவஸ்தான சுகாதாரசங்கச் சட்டத்தின் 29A ம் பிரிவில் சுகாதாரசங்கம் லைசன்சுகள் கொடுக்கிறதற்குச் சலார் நியமிக்கலாமெனச் சொல்லப்பட்டிருப்பதனுலும் அப்படி நியமிக்கப்படும் சலார்களின் விகிதங்கள் அதிகாரமந்திர சபையோடு கூடிய தேசாதிபதியவர்களின் அங்கீகாரத்துடன் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படல் வேண்டுமென் றிருப்பதினுலும்:

1925 ம் ஆண்டு மே (வைகாசி) மாசம் 29 ந் தேதியைக் கொண்ட 7,464 ம் இலக்க அரசாட்சியாரின் கசெற் பத்திரிகையில் 1925 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 11 ந் தேதியைக் கொண்ட அறிவித்தலால் திருக்கோணமலைச் சுகாதார சங்கம் அதிகாரமந்திர சபையோடுகூடிய அரசாட்சிப் பரிபாலக உத்தியோகஸ்ததர் உத்தமனுர் அவர்களின் அங்கீகாரத்தோடு சொல்லப்பட்ட அறிவித்தலில் குறிக்கப்பட்ட கருமங்கள் செய்யப்படும் இடங்களுக்குச் சலார்களின் விகிதங்கள் நியமித்திருப்பதனுலும்:

சொல்லப்பட்ட அறிவித்தலில் "கருங்கல் அல்லது கபுக்கற்குழி..........50·00" என்னும் சொற்களும் இலக்கங்களும் பிழையாய்ச் சேர்க்கப்பட்டிருப்பதினுலும், சொல்லப்பட்ட திருக்கோணமலைச் சுகாதார சங்கத்தார் அதிகார மந்திர சபையோடு கூடிய அரசாட்சிப் பரிபாலக உத்தியோகஸ்தரின் அங்கீகாரத்துடன் சொல்லப்பட்ட பிழையைத் திருத்துகிறதற்கு விரும்பியபடியாலும்:

சொல்லப்பட்ட திருக்கோணமலைச் சுகாதார சங்கத்தார் அதிகார மந்திரசபையோடு கூடிய அரசாட்சிப் பரிபாலக உத்தியோகஸ்தர் அவர்களின் அநுமதியோடு 1901 ம் ஆண்டின் "கருத்துக் கூறும் சட்டத்தின்" 11A ம் பிரிவினுல் அவர்களுக்கும் அவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவத்தைச் செலுத்தி மேற்சொல்லப்பட்ட அறிவித்தலோடு சேர்ந்த வேதனவிகித இடாப்பிலிருந்து "கருங்கல் அல்லது கபுக்கற்குழி .......... 50·00" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் எடுத்துவிட்டதனுல் அவ்வட்டவணையைத் திருத்தியிருக்கிருர்களென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உத்தமனுர் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1925ம் ஆ. செப்டெம்பர் (புரட்டாதி)மீ 8 ந் தேதி.

ஈ. பீ. அலெக்சென்டர்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஜாயலேயில் ஓர் புதிய தபாற்கந்தோர் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 18,804. குறிச்சி—வெலிகம்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டம்புககாவத்தை .. | 28 தென்னைகள் அடங்கியது .. | சுகாதாரசங்கம் .. | 0 1 17·80 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஞூ டிசம்பர் மாசம் 14 ந் தேதியிலன்று பகல் 12 மணிக்கு இக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1925 ம் ஞூ நவம்பர்மீ 14 ந் வ.

டீ. ஜீ. வில்லற்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கடுகண்ணாவ பேராதெனிய கம்பளை ரோட்டை அகலப்படுத்துதலுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 7,846. குறிச்சி—யட்டினுவரை கங்கப்பலாத்தையில் ஈரியகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஸீ. எம். எஸ். இரவு பாடசாலை | ஓட்டால் கட்டப்பட்டதில் பாகம் | கிறிஸ்திய மிஸினெரி சங்கம் .. | 0 0 0·50 |
| 3 | வாகொல்லஹேன .. | சுதேச தோட்டம் .. | எலிஸபெத் அபேசிங்கயும் இன்னும் சிலர்களும் | 0 0 0·55 |
| 5 | ராஜகிறிய .. | ஷை .. | இஸ்டேசன் மாஸ்டர் ரனசிங்க .. | 0 0 15·18 |
| 7 | ஹறனேவெல்ல .. | ஷை .. | வத்தேகம மார்ஸல் .. | 0 0 3·53 |
| 9 | ஷை .. | ஷை .. | எம். கிரிகோரிஸ், ஈரியகம .. | 0 0 0·25 |
| 10 | ஷை .. | ஷை .. | ஆர். அந்தோனி, வத்தேகமம் .. | 0 0 3·75 |
| 11 | ஷை .. | ஷை .. | மீராஸா, பேராதெனிய .. | 0 0 4·93 |
| 12 | ஷை .. | ரோட்டில பாகம் .. | ஷை .. | 0 0 0·25 |
| 13 | ஷெக்டென் .. | றப்பர் நிலம் .. | ஜே. எப். டீ. ஸில்வா .. | 0 0 6 22 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக்கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஞூ டிசெம்பர் மாதம் 15 ந் தேதியிலன்று 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1925 ம் ஞூ நொவம்பர்மீ 20 ந் வ.

டபிள்யு. எல். கின்டேர்ஸ்லி,
மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சலாப ஆஸ்பத்திரியில் பெலமான நிலையுள்ள கொங்கிறீற் கான்கட்டுவ தென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,670. குறிச்சி—சலாப நகரசங்க எல்லைகளுள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லோறுவில்லறூத் தோட்டம் .. | தென்னந்தோட்டம் .. | சலாபம், ஏ. ஜே பருநாந்துவின் பெண்சாதி | 0 0 5·5 |
| 2 | கிறிமெற்றிவத்த .. | வெறு நிலம் .. | நீர்கொழும்பு பிரக்கிராசி அசறப்பா | 0 0 6·7 |
| 3 | அலம்ப .. | சதுப்புநிலம் .. | சலாபம், என். கே. எம். கமறுல ... | 0 0 1[illegible] |
| 4 | ஷை .. | ஷை .. | சலாபம், மைக்கல் ரிசறு .. | 0 0 5[illegible] |
| 5 | ஷை .. | வெறுநிலம் .. | சலாபம், பிலிப்பு மார்க்கு .. | 0 0 [illegible] |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குச் கற்பனைசெய்திருப்பதினுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஹூ மார்கழி மாசம் 21 ந் தேதியிலன்று 11 மணிக்கு சலாபம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சலாபம் கச்சேரி,
1925 ம் ஹூ கார்த்திகைமீ 14 ந் உ.

ஆர். எச். வைட்ஹோர்ன்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வூடன்அல்கொட ரேட்டுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,149. குறிச்சி—பானுவலை

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 81 | பீலகேனஇகலஇறவல .. | கடை கட்டுவதற்காக நிலமும் கடையும் | ஜீ. டீ. சலமன் அப்புகாமியும் மற்றவர்களும் | 0 0 6·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஹூ மார்கழி மாசம் 14 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு றுவான்வலை கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1925 ம் ஹூ கார்த்திகைமீ 18 ந் உ.

எல். ஜே. செனவிறட்ன,
ஜே. ஆர். வோல்றர்ஸ்க்காக,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8,971, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925ம் ஹூ (நவம்பர்) கார்த்திகைமீ 20 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பீ. ஜே. ஹட்சன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரிமை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பீ. ஜே. ஹட்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் றெஜிசர்) நிலநிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம், களகம்பலாத்தை, நிகெம்பஹ கோறளை, கலேகொட கந்துதுளானையைச்சார்ந்த இகலதிம்பிரிவெவக் கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள் :—

இலங்கை அழலைப் பிரதமபடம் 993.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 .. | கெலேவெவேகண்டிய (குளக்கட்டு) .. .. .. | 0 1 9 |
| .. | வெலேபிம .. .. .. .. .. | 11 1 36 |
| .. | வெலேபிமஹன .. .. .. .. | 7 0 28 |

மொத்தம்

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 4 | திம்பிரிவெவேஹூக்கலான, மொறக்கொடஹூக்கலான | 293 | 0 | 25 |
| 5 | வெவேகந்தேபிம (குளக்கட்டுக்குச் சேமிப்பு) | 1 | 3 | 9 |
| 6 | இகல திம்பிரியாவெவ (குளமுங் கட்டும்) | 14 | 3 | 16 |
| 7 | பஹலகலத்தபெந்திவெவவுக்குப் போகும் அடிபாதை | 0 | 0 | 17 |
| 8 | திம்பிரிவெவஹூக்கலான | 128 | 3 | 36 |
| 9 | இகலஹபறவத்தைக்குப்போகுங் காற்பாதை | 0 | 0 | 18 |
| 10 | குளக்கட்டு | 0 | 1 | 0 |
| 11 | இகலஹபறவத்தைக்குப் போகும் காற்பாதை | 0 | 0 | 22 |
| | | 458 | 1 | 16 |

எல்லைகளாவன: வடக்கு-கும்புக்வெவக் கிராமஎல்லை; கிழக்கு-பாலகலட்டாபெந்திவெவ கிராமஎல்லை, கந்துளுகமுவ கிராமஎல்லை; தெற்கு-இகலஹபறவத்தக் கிராமஎல்லை; மேற்கு-வெற்றக்கொளுவேகம கிராமஎல்லை.

[அநுராசபுர வி. உ. 90—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,972, வதுளை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925 ம் ஞூ (நொவெம்பர்) கார்த்திகைமீ 20 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900, 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆட்சிபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப் பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆட்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஞெஜிசர்) நில நிர்ணய உத்தியோகர்த்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (செர்வயர் ஜனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம், பதுள்ளை டிஸ்திறிக் வெல்லாவாய டிவிஷன், கந்தபல்லேகோறளை, இனிகத்கல (பகுதி) கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 292.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 1 | சூடாஓய (பகுதி) | 0 | 2 | 8 |
| 2 | மலஅறு | 0 | 1 | 24 |
| 3 | நஸ்டண்டுயின்ன | 14 | 3 | 12 |
| 4 | அடிபாதை | 0 | 0 | 11 |
| 5 | ஹபுகாபத்தன, ஹுனுகேயின்ன | 45 | 0 | 24 |
| 6 | மைனர்ரோட்டு | 0 | 3 | 32 |
| 7 | எல | 0 | 0 | 7 |
| 8 | ஆறு | 0 | 0 | 30 |
| 9 | இனிகத்கலபத்தன, பனகேயின்ன | 107 | 1 | 22 |
| 10 | டெய்காகந்துற | 0 | 0 | 17 |
| 11 | பெரியரோட்டு (பகுதி) | 1 | 0 | 24 |
| 12 | ரோட்டுக்கு சேமிப்பு | 0 | 3 | 14 |
| 14 | வளவ்வேகந்துறேபத்தன | 0 | 1 | 27 |
| 15 | வளவ்வேகந்துற (பகுதி) | 0 | 0 | 20 |
| | | 172 | 0 | 32 |

எல்லைகளாவன; வடக்கு-இரிமெற்றிய கிராமஎல்லை (பகுதி) (குடாஓயவின் பகுதி), இனிகத்கல (பகுதி) கிராமஎல்லை; கிழக்கு-ஹல்தும்மல கிராமஎல்லை; தெறகு-வல்ஹபுதென்ன கிராமஎல்லை நாறன்மன்கட கிராமஎல்லை (பலாங்கொடையிலிருந்து அல்துமுல்லைக்குப் போகும் பெரியரோட்டின் பகுதி); மேற்கு-நாறன்மன்கட கிராமஎல்லை (பலாங்கொடையிலிருந்து அல்துமுல்லைக்குப் போகும் பெரியரோட்டின் பகுதி), அறஹுதலாவ கிராமஎல்லை (வளவ்வேகந்துறவின் பகுதி) அறஹுதலாவ கிராமஎல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லப்பட்ட எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டு இவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருககின்ற வென்பதையும் அதின் விசாலமாகிய 3 ஏக்கர் 1 றூட் 18 பேட்சஸ் மேற்காட்டிய 172 ஏக்கர் 32 பேட்சுக்குள்ளு மடங்கியிருக்கவில்லை யென்பதையுங் கவனிக்க வேண்டியது:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 292.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 13 | ஹபுகாபத்தன, வள்ஹபுதென்னேபத்தன (119,957, 110,866 ம் உரிமைப்படங்களில் சொல்லிய காணிகள்) | 3 | 1 | [illegible] |

[வதுளை வி. உ. 7—1925.]

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

"உப்பு விலைக்கு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக்கொடுக்க" வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களால் 1925 ம் ஆண்டு மார்கழிமீ 5 ந் தேதி பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

1926 ம் ஆண்டில் நாச்சிக்களி உப்பு டிப்பாற்மேந்தில் விற்கப்படும் உப்பை உதவி ஏசன்றுத்துரையவர்களனுமதிப்படி பாதைக்காரர்களுக்கும் கரத்தைக்காரர்களுக்கும் நிறுத்து ஒப்புக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன் பின்னும் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்.

1. பாதைக் காரர்களுக்கும் கரத்தைக் காரர்களுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க 1,000 அந்தர் உப்புக்கு என்னவீதம் வேணுமென்று கேள்விக்காரர் வெவ்வேறாய் விவரித்துக் காட்டவேண்டியது.

2. போதிய கூலிஆள்களும் கரத்தைகளும் கூலிக்குப் பிடித்து நாள் ஒன்றுக்கு 1,200 அந்தர் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக் கொடுக்க கேள்விக்காரர் ஆயித்தமாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்கமுதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபாய் 50 ஒடுக்கவேண்டும்; அவ்விதமே காசுகட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட சடுதிப்புப்பெற்ற பிணை கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக கட்டின பணம் கவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

4. கொந்தீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரன் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்தக் கொந்திறுத்து சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள் பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏஜன்றுத்துரை அவர்களுக்கும் அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமா யிருக்கவேண்டியது.

9. எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருககுத் தத்துவமுண்டு.

கே. சோமசுந்தரம்,
உதவி ஏசன்றுக்காக.

புத்தளம் கச்சேரி,
1925 ம் ஆண்டு கார்த்திகைமீ 17 ந் திகதி.

R. ROSS COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.